# ஹராப்பானின் ஓராண்டு ஆட்சியில், கனவு மெய்ப்பித்தல்



# அனைத்து சமூக நலன்

- ஜிஎஸ்டிக்கு பதிலாக எஸ்எஸ்டி
- எண்ணெய் விலை நிர்ணயம், RM2.08 வெள்ளிக்கு மேல் போகாத RON95
- வாழ்வாதார உதவித் தொகை
- மைசலாம் சுகாதார காப்புறுதி திட்டம் அறிமுகம்
- B40 உறுப்பினர்களுக்கான சுகாதார பரிசோதனை திட்ட அமலாக்கம்
- இல்லத்தரசிகளுக்கு ஊழியர் சேம நிதி திட்டம்
- டோல் கட்டணம் விலை உயர்வை முடக்கி, மோட்டார் டோல் கட்டணம் ரத்து
- பழைமையான பள்ளிகளின் வசதிகளை மேம்படுத்துதல்
- உடல்பேறு குறைந்த மாணவர்களின் நலன் காத்தல்



- “இணையச் சேவை அதிவேகம், இணையக் கட்டணம் குறைவு” படிப்படியாக அமலாக்கம்
- குறைந்தபட்ச சம்பளம் RM1,100 உயர்வு
- பண்டிகை காலங்களில் விமானங்களின் எண்ணிக்கையை அதிகரித்தல் மற்றும் விமான கட்டணத்தை உறுதிப்படுத்துதல்
- கிள்ளான் பள்ளத்தாக்கில் My100 மற்றும் My50 வரம்பற்ற பயணத்தின் மாதாந்திர பாஸ் அறிமுகம்
- கேடிஎம் டிக்கெட் (மின்சார ரயில்) 20% தள்ளுபடி
- வீட்டுக் கடன் வசதியை எளிதாக்குதல்




# பொருளாதார புத்துணர்ச்சி

- முந்தைய அரசாங்கத்தின் கடன் மற்றும் முதலீட்டு இழப்புகள், 1எம்டிபி, தாபோங் ஜாஹி, பெல்டா மற்றும் மற்ற அரசாங்க நிறுவனங்கள் பிரச்சனைகளைத் தீர்த்தல். பெரிய திட்டங்களை மறுபரிசீலனை செய்து, கலந்துரையாடலின் வழி அத்திட்டங்களின் திறந்த குத்தகைகளின் மூலம் பில்லியன் கணக்கான பணத்தை சேமிக்கப்பட்டுள்ளது, அதில்; இ.சி.ஆர்.எல் திட்டத்தின் வழி சுமார் RM21.5 பில்லியன், எம்.ஆர்.டி2 திட்டத்தில் RM8.8 பில்லியன், எம்.ஆர்.டி3 திட்டத்தில் RM15 பில்லியன் சேமிக்கப்பட்டுள்ளது. சீனாவிற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திடப்பட்ட போது, RM4.5 பில்லியன் செம்பனை எண்ணெய் விற்கப்பட்டது.

- மலேசிய நகர திட்டம் மீண்டும் அமலாக்கம்.
- சுதந்திர மின் உற்பத்தி ஆலையின் எந்த பலனுமளிக்காத 4 குத்தகைகளை ரத்து செய்ததன் வழி, RM1.26 பில்லியன் சேமிக்கப்பட்டுள்ளது.
- போக்குவரத்து துறையில் படிப்படியாக B10 வழி பயோடீசல் திட்டம் (10% செம்பனை எண்ணெய் டீசல் கலவை) அமலாக்கம்.
- சிறிய நில உரிமையாளர்களுடன் ஒத்துழைத்து நிலையான செம்பனை எண்ணெய் சான்றிதழ் அதாவது பயிர்களின் தரத்திற்கு உத்தரவாதம் செய்வதோடு மட்டுமல்லாமல், சிறிய நில உரிமையாளர்களுக்கு அவர்களின் வருவாயை அதிகரிக்க உதவும்.

- சிறிய நில உரிமையாளர்களின் விண்ணப்பத்திற்கு ஏற்றவாறு ரப்பர் பட்டா தயார்படுத்துதல்
- செம்பனை எண்ணெய் தொழில்துறையை மேம்படுத்துதல்



# ஊழல் ஒழிப்பு

- ஊழலில் அரசியல்வாதிகளின் குற்றச்சாட்டு, முன்னாள் பிரதமர் நஜீப் துன் ரசாக், அவரின் துணைவியார் ரோஸ்மா மன்சோர், முன்னாள் துணை பிரதமர் அஹ்மாட் சாஹிட் மற்றும் பலர் உட்பட
- அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் முக்கிய அரசாங்க அதிகாரிகள் சொத்துகளை அறிவித்தல்
- இடைத்தரகர்கள் எடுத்துக் கொள்ளும் கமிஷன்களை ஒழிக்க வேண்டும் என்பதற்காக கல்வி அமைச்சு பள்ளிகளுக்கு வழங்கும் நிதி ஒதுக்கீட்டை பள்ளியின் வங்கிக் கணக்கில் நேரடியாக போடப்படும்.








# சீர்த்திருத்த அமைப்பு

- அரசாங்க நிறுவனங்களை மறுசீரமைத்தல்.
  ஊழல் ஒழிப்பு ஆணையம், தேர்தல் ஆணையம், மனித உரிமை ஆணையம், நாட்டின் நீதித்துறை அலுவலகம், அரச வழக்கறிஞர் அலுவலகம் மற்றும் பல அரசாங்க நிறுவனங்கள் சுதந்திரமாக செயல்படுகின்றன. இதன் வழி, இந்நிறுவனங்கள் நேரடியாக நாடாளுமன்றத்திலும் பிரதமரிடம் அறிவிக்கலாம்.
- தேசிய பொதுக் கணக்கு செயற்குழுவில் தலைவராக எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினரை தேர்வு செய்தல்
- நீதித்துறையின் சுதந்திரத்தை மீட்டெடுத்தல்
- பொதுப் போக்குவரத்து அதிகாரத்தை போக்குவரத்து அமைச்சு மீட்டெடுத்தல்

- ஆசிரியர்களின் நிர்வாக சுமையைக் குறைத்து மாணவர்களுக்குப் பாடம் கற்பித்தலில் மட்டும் கவனம் செலுத்துதல்
- 5 ஆண்டுகளில் பல்கலைக்கழக மற்றும் பல்கலைக்கழக கல்லூரி சட்டம் அகற்றுதல்
- தேசிய சேவை பயிற்சி திட்டம் (பிஎல்கேஎன்) மற்றும் தேசிய பாதுகாப்புப் பணியகம் ஆகியவை அகற்றுதல்
- அரசியலமைப்புத் திட்டங்கள் அறிவிக்கப்பட்டு, சபா மற்றும் சரவாக் நிலையை மீட்டெடுத்தல்

# நிலையான வளர்ச்சி

- பயோ டீசல் திட்ட மேம்பாடு
- மின்சக்தி செலவுகள் மற்றும் சுற்றுச்சூழல் மறுசீரமைப்பு ஆகியவற்றை காப்பாற்றுவதற்காக சூரிய ஆற்றல் கொள்கைகளைப் புதுப்பித்தல், கூரை வீடுகள், சிறிய மற்றும் நடுத்தர தொழிற்துறை தொழிற்சாலைகளில் சூரிய சக்தி நிறுவலை ஊக்குவித்தல்
- RM2 பில்லியன் மதிப்புமிக்க பெரிய அளவிலான சூரிய சக்தி தொடங்குதல் 3 (Large Scale Solar 3) திட்டத் திறந்த குத்தகை
- ஹிட்ரோ, பையோகேஸ் மற்றும் பையோமாஸ் போன்ற முந்தைய அரசாங்கத்தின் புதிய ஆற்றலுக்கான ஒப்புதல்களை ரத்து செய்தல்



- பிளாஸ்டிக் கழிவுகளின் விதிமுறைகளை பரிசீலனை செய்தல் (Code3915)
- நமது நாட்டிற்கு பிளாஸ்டிக் கழிவுகளின் இறக்குமதிக்கு த் தடை
- சட்டவிரோத பிளாஸ்டிக் மறுசுழற்ச்சி தொழிற்சாலைகளை மூடுதல்
- பிளாஸ்டிக் பைகளின் பயன்பாட்டைக் குறைத்தல்
- Renewal Energy என்கிற எரிசக்தி மையங்களை உருவாக்குதல்



மலேசியாவை 61 ஆண்டுகள் தேசிய முன்னணியின் ஆட்சிப் புரிந்த நிலையில், எண்ணிப் பார்க்காத அளவிற்கு நாட்டின் பிரச்சனைகள் உள்ளன. ஆகையால், பக்காத்தான் ஹராப்பான் ஒரு வருட கால அவகாசத்திற்குள் சரிச்செய்வது என்பது கடினமான ஒன்று.

பல சவால்களை எதிர்நோக்கிய போதிலும், பக்காத்தான் ஹராப்பான் அரசாங்கம் அதன் கொள்கைகளை கடைப்பிடித்து நாட்டு மக்களின் நல்வாழ்விற்கும் மேம்பாட்டிற்கும் பாடுபடும். இதனை நிறைவேற்ற அனைவரும் ஒன்றிணைந்து ஒத்துழைப்பு நல்க வேண்டும்.

